முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.19.01.2026

O.S. No. 75/2023

வா,சா-1 மோகன்

4,5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

வாசா.ஆ 2 ஆவணங்கள் எனது பெயரியலான கிரய ஆவணங்கள் என்றால் சரி. இந்த வா.சாஆ 2 ஆவணத்திலுள்ள சொத்தை வழக்கில் ஏ பட்டிகை சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரி. வா.சாஆ 2 ஆவணத்தில் 4 வது இன சொத்து தான் பிராது ஏ பட்டிகை சொத்து என்றால் சரி. வாசாஆ 2 ஆவணத்தில் 4 வது இன சொத்தில் மேற்கு பக்கம் மால் நாடார் சொத்து என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்கம் உள்ள மால் நாடார் சொத்தை தான் வழக்கு பி பட்டிகை சொத்தாக காண்பித்துள்ளனோ என்றால் இல்லை.

வழக்கு சொத்து விவரத்தில் ஏ பட்டிகை சொத்தின் மேற்கு பக்க எல்கையில் பி பட்டிகை சொத்து என்று நான் விவரித்துள்ளேன் என்றால் சரி. ஆனால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது ஏ பட்டிகை சொத்தும் பி பட்டிகை சொத்தும் ஒரே கண்டமாக உள்ளது. பிராது தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் வழக்கு ஏ மற்றும் பி பட்டிகை சொத்தை தனித்தனியாக காண்பித்துள்ளேனா அல்லது ஒன்றாக காண்பித்துள்ளேனா என்றால் ஒன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சாட்சி மாதிரி வரைபடத்தை பார்வையிட்டு சொல்கிறார்.

ஆணையர் வந்து அளந்த போது வா.சாஆ 2 ஆவணத்தின் படி அளவீடு செய்ய நான் கோரிக்கை வைக்கவில்லை என்றால் சரியல்ல. வைத்தோம். ஆணையர் அவரது அறிக்கையில் கிடப்பின் படி அளந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவர் கிடப்பின் படியும்

அளந்தார், ஆவணத்தின் படியும் அளந்தார். ஆணையர் அறிக்கையில் எந்த இடத்தில் வா.சாஆ 2 ஆவணத்தின் படி அளவீடு செய்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது கிரய பத்திரத்தின் படி ஆணையர் அளவீடு செய்ய சொல்லாததற்கு குறிபிட்ட காரணம் உள்ளதா என்றால் நான் ஆவணத்தின் படி அளவீடு செய்ய சொன்னேன். வாசாஆ 2 ஆவணத்தின் படி அளவீடு சேர்த்து அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று ஆட்சேபனை செய்துள்ளேனா என்றால் இல்லை.

ஆவண எண் 4238/1120 ஆவணத்தின் படி அளந்து வழக்கின் சொத்துகளை அடையாளம் காண ஆணையரிடம் குறிப்பாணை கொடுத்துள்ளேன் என்றால் சரி. வா.சாஆ 2 ன் படி குறிப்பாணை ஏதும் கொடுக்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை. ஆணையர் வரைபடத்தில் எந்த விவரம் தவறு என்று சொல்கிறேன் என்றால் மால் நாடாருக்கு 3 சென்ட் பூமி 1090/1 ல் கிடையாது அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணையர் அறிக்கை அளந்த போது மால் நாடார் பெயரிலுள்ள 1123/1987 பத்திரத்தின் படி நான் அளந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு ஆணையரால் அளக்கப்பட்டதா என்றால் அளக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் ஆணையரின் வாரண்டில் அந்த ஆவணத்தை வைத்து தான் அளக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது.

அந்த ஆவணமே 1123/1987 செல்லாது என்று இதுவரை வழக்கு ஏதாவது தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளேனா என்றால் 2022 வரை மால் நாடார் வர வில்லை. 2022 ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1090/1 ல் மால் நாடாருக்கு எந்த பூமியும் இல்லை என்று நான் சொல்கிறேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் சொத்து உள்ளதா என்றால் உள்ளது . அது 1076 சர்வே ஆகும்1 076 ல் மால் நாடாருக்கு பாத்தியமான சொத்து இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த

ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. புல எண் 1090 ல் அமைந்துள்ள 26.27 சென்ட் ஆன்டி நாடாருக்கு பாத்தியபட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் தான் 4238/11 20 என்ற ஆவணம் என்றால் சரிதான். பூர்விக பாத்தியபட்ட சொத்தில் 3 பங்கு 1090 ஆகும், 1பங்கு 1076 ஆகும் அது மட்டுமே மால் நாடாருக்கு பாத்தியமாகும். அந்த புல எண்ணிற்கு மால் நாடர் பெயரிலுள்ள பட்டா, கர ரசீது , வருவாய் ஆணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

இந்த வழக்கில் எனது பெயரில் உள்ள 1090 கூட்டு பட்டாவை வாசாஆ 3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அதில் மால் நாடார் பெயர் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. சாட்சியிடம் ஆவணத்தை காட்டி கேட்டபோது தெரியாது என்று ஆவணத்தை பார்க்காமலே பதில் கூறுகிறார். வாசாஆ 3, 2015 ல் உட்பிரிவு செய்ததாக காட்டப்பட்டது என்றால் சரி. வாசாஆ 3 ஆவணம் மால் நாடாருக்கு பாத்தியமில்லை என்று வாசாஆ 3 ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வாசாஆ 2 விலை ஆவணத்தில் எனக்கு எழுதிக்கொடுத்த நபர் பாக பத்திரத்தின் படி பாத்தியம் என்று கூறியுள்ளார் என்றால் சரி. அந்த பாக பிரிவினை வாக்கரால் பாக பிரிவினை என்றால் சரி.

வாசாஆ 2 ஆவணத்தில் எந்த தேதி , மாதம், ஆண்டு வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக குறிப்பு உள்ளதா என்றால் ஆவண எண் 529/1989 ஆவணத்தின் படி வாய்மொழி, பாக பிரிவினை செய்து கொண்டார்கள். அண்ணன், தம்பி 4 பேர்கள் சேர்ந்து கையெழுத்து போட்டுள்ளார்கள் , மேற்படி 1989 ஆவணத்தில் வழக்கு பட்டிகை சொத்து உட்படும் என்றால் சரி. மேற்படி வாசாஆச 2 ஆவணத்தில் 2 வது பக்கத்தில் 6 வது வரியில் (பத்திரப்படி மேற்படி 523/1989 ஆவணத்தின்படி கிடைத்ததாக சொல்லப்படுகிறது.) பிராது சங்கதிக்கு

எதிராக வாசாஆ 2 சஆவணத்தில் பதிவு செய்த பாக ஆவண்ம் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் பிராதில் வாய்மொழி பாக பிரிவினை என்று தவறாக சங்கதிகள் சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. வாசாஆ 1 வரைபடத்தில் ஏ பட்டிகை சொத்தில் வடக்கு பாகம் எனது அப்பா கணபதியின் பங்கு என்று குறிபிட்டுள்ளேன் என்றால் சரி.வாசாஆ 4 கர தீர்வை ரசீது வீதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வாசாஆ 5 ஆவணம் எனது தந்தையின் சொத்தை மால் நாடாரும் , தங்க ரத்தினமும் பொய் பத்திரம் போட்டதாக காவல் துறையிடம் கொடுத்த புகார் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. அந்த ஆவணம் 23.07.2001 ல் ஏற்பட்டதாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ 5 மனுவானது 29.04.2022 ல் கொடுத்துள்ளேன் என்றால் சரி. மேற்படி ஆவணத்தை வாசாஆ 11 ஆக பதிவு செய்துள்ளேன் என்றால சரி. வாசாஆ 11 எனது தாயாரும், எனது சகோதரரும் , நானும் எழுதிக் கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்யவில்லை. கைரேகையும் அதில் இல்லை.

1ம் எதிரியாக காண்பித்துள்ள மால் நாடார் பெயரில் அந்த ஆவணம் எழுதவில்லை. மால் நாடார் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். மால் நாடார் தான் வாசாஆ 11 ஆவணம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என்று போலிஸ் விசாரணையில் தெரிந்து கொண்டேன்,. அந்த வாசாஆ 5 புகார் மனுவில் வாசாஆ 11 எழுதித் தந்த எனது அம்மாவையோ எனது சகோதரனையோ நான் ஏன் கட்சி சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் சேர்க்கவில்லை. என் அம்மாவையும், சகோதரனையும் போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனது புகார் மனுவில் தற்போது வரை மேல் நடவடிக்கை எதுவும் காவல் துறை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்றத்தில் பரிகாரம் தேட அறிவுறுத்தினார்கள். வாசாஆ 6 புகாரிற்கு ரசீது கொடுத்தார்களா என்றால் நான் வாங்கவில்லை. அவர்கள் கொடுத்தார்கள். உண்மையில் வாசாஆ 6 புகாரே கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக உற்பத்தி செய்த ஆவணம் என்றாலும் சரியல்ல. வாசாஆ 7 புகைபடத்தை யார்எடுத்தார்கள் என்றால் நான் எடுத்தேன். எனது செல்போனில் எடுத்தேன். சிடியில் எவ்வாறு மாற்றப்பட்டது என்றால் இணையதளத்தின் மூலமாக எடுத்தேன். உண்மையில் வாசாஆ 7 ஆவணம் சட்டப்படி ஏற்புடைய ஆவணம் இல்லை என்றாலும் சான்றிதழ் இல்லாததால் ஆவணம் தள்ளுபடி செய்யத்தக்கது. வாசாஆ 8 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது.வாசாஆ 9 ல் முதல் தகவல் அறிக்கையில் வழக்கும் எதிர் வழக்கும் உள்ளது என்றால் சரி.

பிராதில் 01.01.2022 ல் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியிருக்கும் விவரத்தை 29.04.2022 ம் தேதி வாசாஆ 4 புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை. 01.01.2022 ல் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியிருக்கும் விவரத்திற்கு கொடுத்த புகாரை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வாசாஆ 11 ஆவணத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 11 ல் உள்ள சொத்தை பிராதில் ஏ பட்டிகை , அல்லது பி பட்டிகை சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் ஏ பட்டிகை சொத்தாகும். வாசாஆ 11 ல் எத்தனை சென்ட் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் 8 ½ சென்ட் ஆகும். அந்த ஆவணத்திலும் எனது தந்தைக்கு எந்த ஆண்டு, தேதி, பாகம் கிடைத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

வாசாஆ 10 ஆவணத்திலுள்ள சொத்தானது மால் நாடாரும், அவரது சகோதரனும் 2100/1981 ல் ஆவணத்தின் மூலம் கிரயம் பெற்ற சொத்தாகும் என்றால் சரியல்ல. அதில் 2

சொத்துகள் அடங்கும். 2001 ல் வாசாஆ 2 படி கிரயம் வாங்கிய போது சொத்துக்கு அருகில் மால் நாடாருக்கு சொத்து இருந்தது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 8 ½ சென்டிற்கு மேற்கே மால் நாடாரின் சொத்து இருந்தது. இந்த விவரம் 2001 ல் கிரயம் வாங்கிய போதே எனக்கு தெரியும். மால் நாடாரின் 3 சென்டும் புல எண் 1090 ல் அடங்கும் என்றால் சரியல்ல. மால் நாடார் பெயரிலுள்ள 2 சொத்துகள் ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் வழக்கிற்கு பின்புதான் படித்து பார்த்தேன்.

பி பட்டிகை சொத்தில் எனக்கு பாத்தியம் எதும் இல்லாததால் நான் கேட்கும் விளம்புகை பரிகாரமும், ஸ்வாதின மீட்பு பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராதில் தவறு உள்ளது சாட்சி கூறுகிறார். என்ன என்று கேட்டால் வழக்கறிஞரிடம் மட்டுமே சொல்வதாக கூறுகிறார். பிராதில் உள்ள தவறை தற்போது தான் கண்டுபிடித்ததாக கூறுகிறார். பி பட்டிகை சொத்திற்கான கேட்ட செயல்உறுத்து கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல. வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. மால் நாடார் பெயரிலுள்ள காழ்புணர்ச்சியால் தாக்கல் செய்த பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. மால் நாடார் மீது காழ்புணர்ச்சி இல்லை.

எனது முதன்மை வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் மால் நாடாருக்கு எனது சொத்தை அபகரிக்க ஒரு கண் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. பிரதிவாதிகளின் செலவுதொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.,